# தெற்கில் பண்டிகைக் கொண்டாட்டங்கள் ரத்து!

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 17 இதழ் 288
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 02-12-1993

## இதற்கான நிதி இராணுவத்திற்கு

(கொழும்பு)

தெற்கில் அடுத்துவரும் நாட்களில் நடைபெறவுள்ள பண்டிகைக் கொண்டாட்டங்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டு அதற்கென்று செலவாக ஒதுக்கப்படும் பணத்தினை வடக்கு-கிழக்கில் படையினருக்கு வழங்க பல தரப்பிலிருந்தும் அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளதாம்.

இதற்கமைய நாடாளுமன்ற கட்டடத்தில் வழமையாக நடைபெறும் பண்டிகைக் கொண்டாட்டம் இம்முறை ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் வீரசிங்க மல்லிமாராய்ச்சி தெரிவித்துள்ளார். இதற்காக செலவிடப்படும் நிதி படையினருக்கு வழங்கப்படவுள்ளதாக

(5-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகன தொடரணி நகர்வு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காடு- வெற்றிலைக்கேணி, ஆனையிறவு இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக இரவு வேளைகளில் தொடர்ச்சியான துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டவண்ணமிருந்தன.

மண்டலாய், மாவிலங்கை தோட்டம் பகுதிகளில் இரவு பகல் வேளைகளில் இராணுவ வாகனத் தொடர் அணியொன்று

(6-ம் பக்கம் பார்க்க)

## யுத்த தளபாட கொள்வனவு

# வெளிநாட்டு ஆயுத முகவர்கள் கொழும்புக்கு திடீர் வருகை!

## ஆயுதம் விற்பதில் போட்டி

(கொழும்பு)

இலங்கைப் படையினருக்கு அவசரமாகத் தேவைப்படும் இராணுவ தளபாட கொள்வனவு அறிவிப்பை அரசு வெளியிட்டதையடுத்து உலகில் பல நாடுகளிலுமுள்ள இராணுவ தளபாட விற்பனை முகவர்கள் பலர் தற்போது கொழும்பிற்கு அவசர அவசரமாக வந்து பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சு நடத்தி வருவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

ஒபரேஷன் யாழ்தேவி, [illegible] தளபாடங்களை ஆயுதக்கொள்வனவு அறி
பூநகரி முகாம் தகர்ப்பினை புலிகளிடம் இழந்துவிட்டமை அண்மையில் வெளி
படையினர் சுமார் 35 கோடி யானது. இந்த ஆயுத இழப்பை ஈட்ட
ரூபா பெறுமதியான இராணுவ ஈடு செய்யவே அரசு புதிதாக (5ம் பக்கம் பார்க்க)

## 116 யுத்த கவச வாகனங்களை அரசு கொள்வனவு செய்யும்

(கொழும்பு)

இலங்கைப் படையினரின் உடனடித் தேவைக்காக அரசு 116 யுத்த கவச வாகனங்களை வெளிநாடுகளிலிருந்து கொள்வனவு செய்யவுள்ளது. இதற்கான கேள்விப் பத்திரமும் பாதுகாப்பு அமைச்சினால் கோரப்பட்டுள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்வாறு இராணுவ தளபாட கூறுகைப் பத்திரத்தில் முப்பது தென்னாபிரிக்க பவள்

(5ம் பக்கம் பார்க்க)

## இராணுவ வாகனங்கள் மீதும் இனிமேல் கடும் சோதனை!

(கொழும்பு)

இராணுவத்தினர் பயணம் செய்யும் வாகனங்களையும் வீதிகளில் வைத்து சோதனை செய்யுமாறு இராணுவ உயர் பீடம் அறிவித்துள்ளதையடுத்து நாட்டின் பல பகுதிகளிலும் இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு இராணுவ பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இராணுவ வாகனங்களை துஷ்பிரயோகம் செய்வதாகவும் சட்டவிரோதமான பொருட்களை இராணுவ வாகனங்களில் கொண்டுசெல்லப்

(5-ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறில் முப்படை தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானாறு பகுதியை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 7-15 மணியளவில் பலத்த ஷெல்தாக்குதலும், பீரங்கித்தாக்குதலும் நடாத்தப்பட்ட வேளையில் விமானக் குண்டுவீச்சுக்களும் இடம்பெற்றுள்ளது.

இதனால் இப்பகுதி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்ததுடன், பல வீடுகளும் சேதமடைந்தன.

(6ம் பக்கம் பார்க்க)

● ராஜீவ் கொலை வழக்கு:

## பிரபாகரனை கைது செய்ய இந்தியா முயலும்?

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனை இந்தியாவிற்கு பெற்றுத்தருமாறு சி.பி.ஐ. (குற்ற புலனாய்வுத்துறை) இந்திய வெளியுறவு அமைச்சிடம் கேட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## நாஞ்சில் மனோகரன் மீண்டும் தி. மு. க.வில்!

(சென்னை)

திமுகவிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. நாஞ்சில் மனோகரன் மீண்டும் அக்கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக கட்சித் தலைவர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கட்சியின் துணைப்பொதுச்

(5ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (சா/த) வினாத்தாள் பலாலி வந்தது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 6-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த (சாதாரணதர) பரீட்சை வினாத்தாள்களின் முதல் தொகுதி பலாலிக்கு நேற்று எடுத்துவரப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

பதினோராம் திகதி வரைக்

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் பேரணி

(சென்னை)

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கை தமிழ் அகதிகளை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை கண்டித்தும், இலங்கை தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் பொருட்களை வழங்குவதை தமிழ்நாடு அரசு தடைசெய்

(5ம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. (உ/த) பரீட்சை முடிவுகள் கொழும்பில் இன்று வெளியாகிறது

(யாழ்ப்பாணம்)

1993ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகள் இன்று கொழும்பில் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக்கு வெளியே உள்ள பாடசாலைகளின் பெறுபேறுகள் இன்று தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு முடிவுகள் நாளை தபாலில் சேர்க்கப்படும்

(5-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள் மணப்பெண்களின் சோடனை நகைகள், லேஸ், நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகுசாதனப் பொருட்களை நிதானவிலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (எ- 3622)

### மாமைட் போத்தல் தேவை

பிளாஸ்டிக் மூடியுடன்கூடிய சகல அளவிலுமான வெற்று மாமைட் (Marmite) போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேவதி லைன் இண்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சினிமா ஒழுங்கை, யாழ்ப்பாணம். (ஏ-3623)

### அறிவுக்களஞ்சியம்

"அறிவுக்களஞ்சியம்" அறிவியல் ஏட்டை மாணவர்கள் மட்டுமன்றி பெரியவர்களும் அறிஞர்களும்கூட வாசிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள். 18-வது இதழ் இப்போது விற்பனையாகிறது! ரூபா 12/-. (ஏ-3632)


யாழ். மாவட்டத்தில்

## இரு கல்வி வலயங்கள்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களம் தற்போது வடக்கு வலயம் தெற்கு வலயம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டு கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மருதனார்மடத்தில் இயங்கவுள்ள வடக்கு வலயப்பணிப்பாளராகவிருக்கும் நொச்சிமாவட்ட கல்விப் பணிப்பாளராகக் கடமைபுரிந்த திரு. க. கந்தசாமியும் யாழ்ப்பாணத்தில் இயங்கவுள்ள தெற்கு வலயப் பணிப்பாளராக வடக்கு கிழக்கு மாகாணசபையில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய செல்வி திலகவதி பெரியதம்பியும் நியமிக்கப்பட்டுள்ளனர். 139-இ

## பாடசாலை உபகரணங்கள்

(மானிப்பாய்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அகதி முகாம்களில் வாழும் மக்களின் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரை கல்வி பயிலும் சிறார்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வருகின்றனர்.

மேலும் இந்நிறுவனம் கட்டுடையிலுள்ள செல்லிடோசனுள் என்ற அகதி முகாமில் வாழும் மக்களுக்கு ஈரத்திற்கு விரிப்பதற்காக பாய் சிற்றுகளை வழங்கியுள்ளனர். —71


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான விண்ணப்பதாரர்களிடமிருந்து அணு மருத்துவத் (பௌதிகவியல்) தில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 1993-12-24 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:

4585/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1993 டிசம்பர் 31 ஆம் திகதி வரை.

5270/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1994 ஜனவரி தொடக்கம்.

குறிப்பு:

இதற்கு மேலதிகமாக 1994 டிசம்பர் 31 வரை மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப்படியாக வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப்படிவத்தையும் விபரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவினைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக சிரேட்ட உதவிப்பதிவாளரின் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தபால்மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியுடைய காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ அளவுடைய 1/- ரூபா முத்திரையொட்டப்பட்டு சுயமுகவரியிட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-11-29. (எ 3633)


# மட்டக்களப்பில் கடும் மழை ஐயாயிரம் குடும்பம் பாதிப்பு

(கட்டுநகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையினால் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

பல இடங்களில் வீடுகள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதினால் இப்பகுதியில் போக்குவரத்து செய்ய முடியாத நிலையேற்பட்டுள்ளது. வாழைச்சேனையில் நாலாயிரத்திற்கும் அதிகமானோர் மழையினால் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். வாகரையில் ஆயிரம் பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பணிச்சங்கேணி, வட்டவளை ஆகிய பகுதிகளிலே மழை வெள்ளத்தினால் மக்கள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது. -இ

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி அருணாசலம் சிவபாதசுந்தரம் நினைவுப் பேருரை யாழ். பல்கலைக் கழகத்தில் கைலாசபதி கலையரங்கில் நாளை மூன்றாம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்வாண்டு இப்பேருரையைச் சமூக மருத்துவத் துறைத் தலைவர் கலாநிதி என். சிவராசா நிகழ்த்தவுள்ளார். நமது பிள்ளைகளின் ஊட்ட நிலைமை என்னும் பொருள்பற்றி இப்பேருரை அமையும்.

குழந்தை மருத்துவத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற நிபுணராகிய வைத்திய கலாநிதி அ. சிவபாதசுந்தரம் சிறந்த பண்புகளும், தொண்டு மனப்பான்மையும் கொண்டவர்.

இவர், 1987ல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடமை மேற்கொண்டிருந்த வேளையில் அமைதிப் படையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் துறந்தவராவர்.

## வீதிசீர்கேடு

(பண்டத்தரிப்பு)

அண்மையில் பெய்த பெருமழையை அடுத்து சமீபனே யாழ்ப்பாண பிரதான வீதி பெரும் சீர்கேடு அடைந்து குண்டும் குழியுமாக காணப்படுகிறது இதில் வெள்ளம் தேங்கி நின்று காணப்படுவதால் மக்கள் போக்குவரத்திற்கு மிகுந்த கஷ்டமாக இருக்கிறது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட நூல்நிலைய நூலகர்கள், உதவி நூலகர்களுக்கான இரண்டுநாள் கருத்தரங்கு நிகழ்வு இம்மாத பிற்பகுதியில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிராந்தியத்தில் நூலகர்களாக, உதவி நூலகர்களாக கடமையாற்றுபவர்கள் பங்குபற்றுவார்கள். -158

## தென்னைக்கு உரமிட சில ஆலோசனைகள்

(யாழ்ப்பாணம்)

தென்னை மரத்திற்கு உரமிடுவதற்கு மாரிகாலம் ஏற்ற காலமாகையால் தெங்குச் செய்கையாளர்கள் இதில் கூடிய கவனம் செலுத்துவதன் மூலம் தேங்காய் உற்பத்தியைக் கூட்டலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாவருடம் 5 வயதிற்குட்பட்ட தென்னங்கன்று ஒன்றுக்கு 1½ கிலோ வை. பீ. எம். இளமரக் கலவை உரமும் 5 வயதிற்கு மேற்பட்ட பாளை வந்த தென்னைகளுக்கு 2½ கிலோ கிராம் ஏ. பீ. எம். (முதிர்மரக்கலவை) உரமும் இடுதல் அவசியமாகும்.

ஆக வயதில் குறைந்த தென்னங்கன்றுகளுக்கு வயதிற்கேற்ப விகிதாசாரமான அளவுகளில் உரமிடுதல் வேண்டும். வை. பீ. எம்., ஏ. பீ. எம். உரங்களைப் பிரயோகிக்கும் முறை, தென்னை, நாற்று நடுதல், வண்டுத்தாக்கம் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளுக்கு தென்னைப்பயிர்ச் செய்கைச்சபை யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜெ. சத்தியேந்திரனுடன் நல்லூர் கமநலசேவை நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு தென்னைப்பயிர்ச் செய்கையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். -வி

## இலங்கையில் 32 பேர் எயிட்ஸினால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 32 பேர் எயிட்ஸ் நோயினால் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 26 பேர் மரணமடைந்துவிட்டார்கள்.

இலங்கையில் 1986ம் ஆண்டு முதல் தடவையாக எயிட்ஸ் நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டு ஐந்து வருடங்களின் பின்னர் இலங்கையிலும் எயிட்ஸ் நோயாளர்கள் இருப்பது தெரியவந்தது இங்கு முதல்தடவையாக எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர் ஒரு பிரிட்டிஷ் பிரஜையாவார். 1987ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தடவையாக இலங்கையர் ஒருவருக்கு எயிட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கையில் 118 பேர் எச். ஐ. வி. வைரசினால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த எண்ணிக்கை 3400க்கும் கூடுதலாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. -ரி

## ஒளிவிழா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு ஜெசிந்தா றோமன் கத்தோலிக்க கனிஷ்ட வித்தியாலயத்தின் ஒளிவிழா நாளை 3ம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் மானிப்பாய் செ. ஆன்ஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. —72

செயலக நலன்புரிச்சங்கம்

## விமான தாக்குதலை நிறுத்த ஜனாதிபதிக்கு மகஜர்

(மானிப்பாய்)

யாழ். செயலகத்தின் மீதும் சென் ஜேம்ஸ் தேவாலயத்தின் மீதும் யாழ். மாவட்டத்திலுள்ள பொதுஸ்தாபனங்கள், குடியிருப்புகள் ஆகியவை மீதும் விமானப்படையினர் நடாத்திவரும் கண்மூடித்தனமான குண்டு வீச்சைக் கண்டித்து யாழ். செயலக நலன்புரிச்சங்கத்தினர் ஜனாதிபதிக்கு மகஜரொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: தங்கள் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப்படும் ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் அநியாயமாக அர்த்தமற்ற தாக்குதல்களைச் செய்யும் போதெல்லாம் அதனால் பாதிக்கப்பட்டவர்கள் கண்டனப் பேரணிகளை நடாத்தி எமக்கூடாக தமது கண்டன அறிக்கைகளைத் தங்களுக்கு அனுப்பி வந்தனர், தற்போது நாங்களே அந்த நிலைக்கு ஆளாகியுள்ளோம்.

பொது மக்களின் குடியிருப்புகள், பொதுமக்கள் கூடும் இடங்களான சந்தைகள், கடைத்தெருக்கள், நூல்நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், அலுவலகங்கள், ஆகியன குண்டுவீச்சு விமானங்களாலும், எறிகணைகளாலும் கண்மூடித்தனமாகத் தாக்கப்படுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம், இத்தகைய மிலேச்சத்தனமான தாக்குதல்கள் இனிமேல் நிகழாதிருக்கத் தயவு செய்து தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள ஆயுதப்படையினரைப் பணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அம்மகஜரில் கேட்கப்பட்டுள்ளது. (71-சி)

பிரதேச செயலர் பிரிவுகளில்

## தையல் பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1994ம் ஆண்டில் ஒரு பிரதேச செயலர் பிரிவில் ஒரு தையற் பயிற்சி நிலையம் வீதம் அமைத்துக்கொடுப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரதம செயலாளரினால் மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்துக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் தையற் பயிற்சி நெறியை நடாத்துவதற்கு வசதியாக ஒரு கட்டிடத்தை இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் படி பிரதேச செயலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

இப்பயிற்சி நெறிக்கான போதனாசிரியர் திணைக்களத்தினால் நியமிக்கப்படுவாரென்றும் பயிற்சிக்கான தையல் இயந்திரங்கள் திணைக்களத்தால் வழங்கப்படுமென்றும் இப்பயிற்சி நெறி ஓராண்டு காலத்துக்கு மட்டும் ஒரு கிராமத்தில் நடைபெறுமென்றும் ஆகக்கூடியது 30 பயிலுனர்கள் மட்டும் ஒரு சமயத்தில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுவரென்றும் தெரியவருகின்றது. (161)


## யாழ்ப்பாணத்து இராத்திரிகள்

- செங்கைஆழியான் -

மேற்படி நூல் வெளியீட்டு விழா

எதிர்வரும் ஞாயிறு [05-12-93]

பிற்பகல் 3-00 மணிக்கு

யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(கி-628) யாழ். இலக்கியவட்டம்.

**மனிதனுக்கு**

"உபதேச மொழிகளைவிட முன்மாதிரிகள் மனதில் பலமாகப் பதிகின்றன."

- ஹென்றிஃபீல்டிங்ஸ்

# நமது நோக்கு

## நெருக்குதல்கள் அதிகரிப்பு!

ஐ. நா.வின் ஒரு பிரிவான சமாதானம், சமாதானத்திற்கான உலகப் பேரவை இலங்கை இனப்பிரச்சினைபற்றி கண்டியில் மாநாடு நடாத்தி அறிக்கை வெளியிட்டிருக்கின்றது.

யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு உடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை விடப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல, சர்வதேச ரீதியில் சமாதானத்திற்காக செயலாற்றிவரும் 16 அமைப்புகள் இருபகுதினரையும் சமாதானப் பேச்சுக்குக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இந்த மாநாட்டில் பேசிய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து சென்றிருந்த பிரதிநிதி, சமாதானத்தை உருவாக்கும் புலிகள் பல தடவைகள் அனுப்பிய சமாதானச் செய்திகளை அரசாங்கம் நிராகரித்து வந்துள்ள நிகழ்ச்சிகளை விளக்கமாக எடுத்துக் கூறியிருந்தார்.

இதேவேளை, உள்நாட்டிலும் அரசுக்கு நெருக்குதல்கள் அதிகரித்து வருகின்றன.

தோட்டங்களை நிர்வகிக்கும் தனியார் கம்பனிகள் விதிக்கும் நிபந்தனைகள் தொழிலாளருக்குப் பாதகமாக அமைந்துள்ளன. நீண்டகாலக் குத்தகைக்குக் கோருவதோடு அரசின் அமைப்புகள் கலைக்கப்பட வேண்டும் எனவும் இவை கோருகின்றன.

இ. தொ. காங்கிரஸ் இந்த நிபந்தனைகளுக்கு எதிராக அரசின் மீது நிர்ப்பந்தத்தைப் பிரயோகித்து வருகிறது. அதன் ஆதரவை இழந்தால், மூன்று மாகாணங்களில் யூ. என். பி. கணிசமான வாக்குகளை இழக்க வேண்டிய அவலநிலை ஏற்படும்.

தற்போது, சுதந்திரக் கட்சியும் புதிய போக்கொன்றை உயர்த்தியுள்ளது. "இனப் பிரச்சினையைத் தீருங்கள் அல்லது பதவி விலகுங்கள்!" என அதன் செயற்குழு தீர்மானித்துள்ளது.

தீர்மானத்தோடு நில்லாது, நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடாத்தி அரசின் முகத்திரையைக் கிழிக்க உள்ளது.

பயங்கரவாதப் பிரச்சினை என்று தாளமிட்டுப் பாடிக் கொண்டு, போரிடும் படையினருக்குப் பற்றையும், நுளம்புத் திரியும் தாருங்கள் எனப் பொதுமக்களிடம் பிரசாரம் செய்து கொண்டிருக்கலாம் என்ற அரசின் கனவுகளையும் காலம் கனிந்து கொண்டிருப்பது போலத் தெரிகிறது.

வடகிழக்கு மாகாண ஆளுநராக வயனல் பெர்ணாண்டோ நியமனம் அரசின் போக்கில் மாறுதல் உண்டாகுகின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

"நெருக்குதல்கள்" வெறும் அரசியற் பூச்சாண்டிகளாக இருக்காது, சமாதான முயற்சிகளுக்குத் துணையாக இருக்க வேண்டியது அவசியம்!

# எயிட்ஸ் நோய் இந்தியாவில் அதிவேகமாக பரவிவருகிறது

## 25 லட்சம் பேர் பாதிப்பு

(புதுடில்லி)

இந்துமா கண்டத்தில் எயிட்ஸ் நோய் இந்தியாவிலேயே மிக வேகமாக பரவிவருவதாக வைத்திய ஆராய்ச்சிகளின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவில் இந்த நோய், குறிப்பாக தமிழ்நாடு, மணிப்பூர், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் வேகமாக பரவி வருகின்றது.

இந்தியாவில் 1986ம் ஆண்டு முதலாவது எயிட்ஸ்நோயாளி கண்டுபிடிக்கப்பட்டார். தற்போது இந்தியாவில் 25 லட்சம் பேருக்கு எயிட்ஸ் நோய் அறிகுறிகள் தென்பட்டுள்ளதாகவும் இது 1996ம் ஆண்டு 30 லட்சமாக அதிகரிக்கும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் நாட்டிலும், மகாராஷ்டிரத்திலும், ஆயிரத்திற்கு 22 பேர் என்ற வீதத்தில் இந்நோயின் அறிகுறிகள் தென்படுகின்றது.

தமிழ் நாட்டில் சுமார் 5 லட்சம் பேரை பரிசோதித்த போது இதில் 3500 பேருக்கு எயிட்ஸ நோய் அறிகுறிகள் காணப்பட்டுள்ளது.

இந்த நோய்க்கு உடனடியாக தக்க வைத்திய வசதிகளை மேற்கொள்ளாவிட்டால் இந்தியாவில் வருங்காலத்தில் 80 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயினால் முற்று முழுதாகப் பீடிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோயை குணப்படுத்துவதற்கு இந்திய அரசு வருங்காலத்தில் ஆண்டொன்றுக்கு 9 கோடி ரூபாவை செலவு செய்யவேண்டி நேரிடுமென்று வைத்திய அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

—வி-ஓ

## போஷாக்குணவு விநியோகம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணிப்புரி கலைமகள் சனசமூக நிலையத்திற்கு சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான போசாக்குணவு நல்லூர் பிரதேச விசேட ஆணையாளர் திரு ஆ. மகாலிங்கம் நிலையத் தலைவர் திரு. டி. பி. இம்மானுவேலிடம் கையளித்தார்.

இப்பகுதி சிறுவர்களுக்கு நிலையத்தில் வைத்து இப்போஷாக்குணவு அண்மையில் வழங்கப்பட்டது. (154)

## மாணவர்க்கு உதவிப் பணம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தொழில் நுட்பக் கல்லூரியில் உதவிப்பணம் வழங்க ஏற்பாடாகியுள்ளது. இவ்வாண்டுக்குரிய உதவிப்பணம் சகல கற்கை நெறிகளிலும் இருந்தும் தெரிவான 55 மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதெனவும் எதிர்வரும் 10-ம் திகதி இக்கொடுப்பனவு வழங்கப்படும் எனவும் தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் கே. பொன்னையா தெரிவித்துள்ளார்.

● வெளிநாடுகளிலிருந்து திரும்பிய

# தமிழர்கள் நீர்கொழும்பில் பொலிஸாரால் தடுத்துவைப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பிய தமிழர்கள் சர்வதேச விமான நிலையத்தில் கைதாகி விசாரணைசெய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் அதிகமான தமிழர்கள் நீர்கொழும்புப் பொலிஸ் நிலையத்தில் நீண்ட நாட்களாகத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக அண்மையில் நோர்வேயிலிருந்து திரும்பும் போது மேற்படி விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட பொறியியலாளர் ஒருவர் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து திரும்புபவர்கள் யாழ்ப்பாணத்தவர் என்று தெரிந்தால் உயர்பதவி வகிப்பவர்களாக இருந்தாலும் காரணமின்றி பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

மேற்குறிப்பிடப்பட்ட பொறியியலாளருடன் லண்டனிலிருந்து திரும்பிய டாக்டர் ஒருவரும் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளாராம். இவ்வாறு கைது செய்யப்படுபவர்களிடமிருந்து கள்ளமாகப் பணம் பறிக்கும் முயற்சியிலும் பொலிசார் ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிசாரினால் கைது செய்யப்பட்டவர்களில் டாக்டர் பொலிசாருக்கு பெருந்தொகையான பணம் கொடுத்து தமையாக விடுதலை செய்யப்பட்டார். பொறியியலாளர் பணம் கொடுக்க மறுத்தமையால் 21 நாட்கள் விளக்கமறியலில் வைத்த பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். நீதிபதி அவரை விடுவித்த போதும் விடுதலை செய்தமைக்காக நாலாயிரம் ரூபா பணம் செலுத்துமாறு பொலிசாரால் மிரட்டப்பட்டாராம்.

அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பிய பொறியியலாளர் தங்களைப் போல நூற்றுக்கணக்கான தமிழர்கள் நீர்கொழும்புப் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பு விமான நிலையத்தினூடாக வெளிநாடுகளுக்கு பயணம் செய்பவர்கள் வெளிநாடுகளிலிருந்து திரும்புபவர்கள், உறவினர்கள் வழியனுப்ப வருபவர்கள் எனத் தினமும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் பொலிசாரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனராம்.

(வி-ரி)

# "சவால்களை எதிர்கொண்டு கல்விச்செல்வத்தை வென்றெடுக்க வேண்டும்"

(உடுவில்)

"தமிழ்மொழியைக் கற்று தேர்ச்சியடையும் நோக்கில் மாணவர்கள் ஆங்கிலத்தையும் பயின்று தேர்ச்சி பெறவேண்டும். ஆங்கிலம் இங்கு மாத்திரம் பேசப்படும் மொழியல்ல. அது சர்வதேச மொழி. உலகின் அனைத்து நாடுகளிலும் அதனைப் பயன்படுத்தி வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ளவும் முடிகின்றது. ஆங்கிலத்தின் அவசியத்தையும் தேவையையும் மாணவர்கள் உணர்ந்து அதில் தேர்ச்சி பெறவேண்டும்."

யாழ் அரச அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற நிறுவனர் நினைவு நாள் பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

எத்தனையோ அழிவுகள், இடர்கள் மத்தியிலும் கூட யாழ்ப்பாண பாடசாலைகளில் குறிப்பாக இராமநாதன் கல்லூரியில் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளும், நிர்வாகமும் சீராக இயங்கி வருகிறதென்றால் அதற்கு அதிபர் ஆசிரியர்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற சேவையே காரணமாகும்.

எத்தனையோ சவால்களை நாம் எதிர்நோக்கியுள்ளோம். அவற்றையெல்லாம் மனம் தளராது எதிர்கொண்டு கல்விச் செல்வத்தை வென்றெடுக்க வேண்டும். உங்களை நீங்கள் அறிந்து கொள்ளவும் உங்கள் பலவீனத்தைக் குறைத்து பலத்தை அதிகரிக்கவும், மனக்கட்டுப்பாட்டுடன் புறநிலைக் கல்வியைப் பெற்றுக்கொள்ளவும் கல்வி அவசியமாகின்றது.

தமிழீழ கல்விக் கழக உதவிப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன் சிறப்புரையில் கூறியதாவது: எதிர்கால சந்ததி எல்லா முறையையும் விஞ்ஞானரீதியான நிலையில் பார்க்கப்போகிறது. பழைய நினைவுகளை நினைவு கூருவதுடன் நின்றுவிடாமல், புதுமையான இன்றைய சூழ்நிலையை மாணவ உலகம் ஏற்று மனமாற்றம் பெற்று வாழ வேண்டும். எதிர்கால சந்ததி அறிவு, ஆற்றல், செயற்திறன், பொது அறிவு ஆகியவற்றுடன் போர்க் கலையையும் அதனுடன் தொடர்புடைய தொழில் நுட்ப அறிவையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆர். எஸ். நடராசா நிறுவனர் நினைவுரையாற்றினார்.

திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர் மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். (109)

## இராசிபலன்

02-12-1993

வியாழக்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 18)

திருதியை பி. ப. 1-27 வரை திருவாதிரை மு. ப. 9-30 வரை கரிநாள் இராகுகாலம் நண்பகல் 1-45 முதல் 3-15 வரை சுபநேரம் இரவு 7-45 முதல் 9-15 வரை.

மேடம்: மேலான போக்கு, தர்மசிந்தனை, தொழில்சிறப்பு

இடபம்: அடுத்தவர் பெருமை, பணமுடை, காரியதடை.

மிதுனம்: கலந்துரையாடல் குடும்பமகிழ்ச்சி, பிறர் உதவி.

கடகம்- இடமாற்றம், தொழில் குறைவு, அச்சம்.

சிம்மம்: நண்பர் வருகை, தாமதமான வெற்றி, சகோதர பிரயாசம்.

கன்னி: தொழில் சிறப்பு, வாக்குவன்மை, புதிய உறவு.

துலாம்: மனப்போராட்டம், கடமை தவறுதல், விதண்டாவாதம்.

விருச்சிகம்: அடிபணிதல், குடும்பபிரிவு, வேதாந்தம்.

தனுசு: எதிர்பார்த்த உறவு மனமகிழ்ச்சி, பாராட்டு.

மகரம்: சோம்பல், மாமிசர் பெருமை, காரியசித்தி.

கும்பம்: பழைய பகை, அதிகாரிகள் தூர், யோசனை.

மீனம்: வீட்டில் கவலை, தொழில் கஷ்டம், பதட்டம்.

—ஜோஸ்யர்.

# அனுமதி பரீட்சை நடத்தத் தேவையில்லை

(திருநெல்வேலி)

ஆண்டு-5 மாணவர்களுக்கான பரீட்சைக்குப் பதில் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு கல்வித் திணைக்கள மேற்பார்வையிலே விடைத்தாள்கள் திருத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பெறுபேறுகளின் அடிப்படையிலேயே மாணவர்களை ஆண்டு 6க்கு அனுமதி வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாடசாலைகள் அனுமதிப் பரீட்சைகள் நடாத்த தேவையில்லை என்றும் இப்பரீட்சைப் புள்ளிகளை வைத்து அனுமதிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் தேசிய பாடசாலைகளில் பரீட்சை நடாத்தலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (157)

**எள்ளிலே உண்டு - நல்ல எண்ணை**
**அதை மண்ணிலே விதைத்தால் இலாபம் கொள்ளை**

## பூநகரியில் பலியான படையினர் விபரம்

# முரணான தகவலினால் சிங்களவர்

# மத்தியில் பெரும் குழப்பம்

(கொழும்பு)

பூநகரி — நாகதேவன்துறை ராணுவ கடற்படை கூட்டு முகாமில் இறந்த படையினரின் எண்ணிக்கையை அரசும் பாதுகாப்புப் படையினரும் முன்னுக்குப்பின் முரணாக வெளியிடுவதால் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச ராணுவச் சட்டங்களுக்கு முரணாக பூரண ராணுவப்பயிற்சி பெறாத சிங்கள இளைஞர்கள் போர்முனைக்கு அரசினால் அனுப்பி வைக்கப்படுவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அண்மையில் பூநகரி முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பூரண ராணுவப்பயிற்சி பெறாத இருநூற்றிற்கும் மேற்பட்ட சிங்கள ராணுவ பயிற்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. —கி

# கடல் சுழியில் சிக்கி

## இரு இளைஞர்கள் பலி

தாளையடி

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று கடலில் மூழ்கி இரு இளைஞர்கள் பலியாகியுள்ளனர்.

செம்பியன்பற்று நெல்லியானைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் நேற்று முன்தினம் பத்து மணியளவில் செம்பியன் பற்று கடற்கரையில் ஏரல் சிப்பி பொறுக்குவதில் ஈடுபட்டிருந்தனர். இவர்களில் இருவர் கடலின் ஆழமற்ற பகுதியான கரையிலிருந்து சுமார் 50 யார் வரை நடந்து சென்றவேளை திடீரென ஆழமான பகுதியில் சுழியினுள் அகப்பட்டு நெல்லியானைச் சேர்ந்த சின்னத்தம்பி கமல் (வயது 17) ம. சுரேஷ் (வயது 18) கடலுக்குப் பலியானார்கள்.

கடல் கொந்தளிப்புக்கிடையில் இவர்களின் சடலங்களைத் தேடும் முயற்சியில் கடற்றொழிலாளர்கள் ஈடுபட்டும் மாலை வரை சடலங்கள் கிடைக்கவில்லை. (153-கி)

---

### விநாயகவிரதம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தைமடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவிலில் விநாயகர் விரதம் இம் மாதம் 19ம் திகதிவரை அநுட்டிக்கப்பெறும். இக்காலங்களில் பி. ப. 4 மணி முதல் விசேட அபிஷேகம் பின்னோர் கதைப் படிப்பு என்பன நடைபெறும். 19ம் திகதி கஜமுக சங்காரமும் நடைபெறும்.

---

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை பரிசளிப்பு விழா திருநெல்வேலி கலாமன்றத்தில் இன்று 2ம் தேதி பி. ப. 2 மணிக்கு நடைபெறும்.

0 0 0

(நெல்லியடி)

வடமராட்சியிலுள்ள பாடசாலைகளின் சைவ ஆசிரியர்கள் மாநாடு இன்று 2ம் தேதி காலை 8-30 மணிக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை தலைமையில் இம்மாநாடு நடைபெறும். —160

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 5ம் திகதிவரை மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது. கழக ஆண்டுப் பரீட்சை எடுக்கும் 1ம் ஆண்டு மாணவர்களுக்கு ஒரு லீற்றரும் கணக்கியல் உயர்தேசிய டிப்ளோமா 2ம், 3ம் ஆண்டு மாணவர்களுக்கு 2 லீற்றரும் இறுதியாண்டு மாணவர்களுக்கு 3 லீற்றரும் வழங்கப்படும்.

இம் மாணவர்களுக்குரிய மண்ணெண்ணெய் லீற்றர் 30 ரூபாவாக வழங்கப்படும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆண்டு 3, 4, 5 பொதுப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி இன்று காலை 9 மணிமுதல் வட்டு. இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆகிய மதிப்பீட்டு நிலையங்களில் ஆரம்பமாகும்.

இம்மதிப்பீட்டுப் பணிக்கு ஆண்டு 3ல் கற்பிக்கும் ஆசிரியர்களை இன்றும், ஆண்டு 4ல் கற்பிக்கும் ஆசிரியர்களை நாளையும் தவறாது சமூகமளிக்க வேண்டுமென்று கோட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆண்டு 3, 4, 5 மாணவர்களுக்கான தொடக்க விஞ்ஞான மதிப்பீட்டுப் பரீட்சை இன்று 2ம் தேதி நடைபெறும். இதற்கான அறிவுறுத்தல்களாவும் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## சவுக்கு மரம் தெரிந்து களைதல் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் உள்ள மணற்காட்டுப் பகுதியில் நடுகை செய்யப்பட்ட காலம் தொடக்கம் நடைமுறைப் படுத்தப்படாதிருந்த "சவுக்கு மரம் தெரிந்து களைதல்" நடவடிக்கையினை சூழல் பாதுகாப்பு நிறுவனம் தற்போது ஆரம்பித்துள்ளது. மிக நெருக்கமாக வளர்க்கப்பட்டுள்ளும் சவுக்கு மரங்களிலிருந்து ஒன்றுவிட்ட ஒரு மரம் களைந்து எடுப்பதன் மூலம் ஏனைய மரங்கள் நன்கு பருத்து வளர வாய்ப்பளிக்கப்படுகின்றது.

வெட்டப்படும் மரங்களில் இருந்து கிடைக்கும் விறகினை விற்பதன் மூலம் பெறப்படும் நிதியினைப் பயன்படுத்தி 1994-ம் ஆண்டில் 1000 ஏக்கர் நிலத்தில் சுமார் 12 லட்சம் சவுக்கம் மரங்களையும் 200 ஏக்கர் நிலத்தில் தென்னை நடுகையினையும் மேற்கொள்ளத்திட்டமிடப்பட்டுள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டிருக்கும் விறகுத் தட்டுப்பாட்டினால் பல்பயன் தரு மரங்களான வேம்பு, புளி போன்ற மரங்கள் கண்மூடித்தனமாக அழிக்கப்படுவதாகவும் அதனைக் குறைப்பதற்காக சகலருக்கும் நியாய விலையில் இவ்விறகினை விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் எரியும்போது அதிக சக்தியைத் தரக்கூடிய இவ்விறகினைப் பெற விரும்புவோர் தங்கள் பெயர்களை முன்கூட்டியே மணற்காட்டில் உள்ள இந்நிறுவனத்தின் நடவடிக்கை காரியாலயத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. -கி

---

## யாழ்ப்பாணத்தில் பரீட்சை நடத்தக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியின் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பயிற்சியின் நான்காவது ஆண்டுப்பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடாத்த சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி செயலகத்திருந்து கொழும்பிலுள்ள யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கடந்த மாதம் 22ம், 23ம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பரீட்சை வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்படாமையினால் மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறவில்லை.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவே இது பற்றி தகவல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (158-ரி)

---

### வை. கோ சுயே. உறுப்பினர்

(சென்னை)

தி. மு. கவிலிருந்து நீக்கப்பட்ட திரு வை. கோபாலசாமி, இனிமேல் சுயேட்சை உறுப்பினராக ராஜ்யசபா விவாதங்களில் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. -கி

---

கிரிக்கெட்:

### வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

மே. இந்திய இலங்கை அணிகளுக்கிடையில் கொழும்பில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டி மழை காரணமாக இடை நிறுத்தப்பட்டதால் ஆட்டம்வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர் விபரம்: மே. இந்தியா - 39 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 197 ஓட்டம் (லாரா-89) இலங்கை 12 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 33 ஓட்டம் (அரவிந்தடி சில்வா-02) (சி)

---

### தெற்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வும் அவர் தெரிவித்தார்.

இவ்வகையான கோரிக்கை ஒன்றை பிரதி சபாநாயகர் திரு. காமினி பொன்சேகாவும் விடுத்துள்ளார். இதேவேளை பல நிறுவனங்களும் சொண்டட்டங்களை ஏற்றுச் செய்து அதற்கான நிதியை படையினருக்கு வழங்க முன்வந்துள்ளனவாம். -கி

---

தொடர்ந்தே திரு. நாஞ்சில் மனோகரனை கருணாநிதி கட்சியிலிருந்து வெளியேற்றியதும் குறிப்பிடத்தக்கது. (க-கி)

---

### க. பொ. த.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இம்முறை பரீட்சை முடிவுடன் மாணவர்கள் மாவட்ட, தேசிய மட்டத்தில் பெற்றுள்ள முன்னேற்ற விபரப் பட்டியலும் வழங்கப்படவுள்ளதாம்.

வடபகுதி பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் விரைவில் கிடைக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம-கி)

---

### 116 யுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கவச வாகனம், 26 ரி 56 ரக டாங்கிகள், 40-7 சி. 432 ரக பாதுகாப்பு ஆளணி கவச வாகனங்கள், 10 சலாடின் கவச வாகனங்கள், 10 பெரட் கவச வாகனங்கள் என்பன கொள்வனவு செய்ய கேட்கப்பட்டுள்ளது.

தற்போது இலங்கை இராணுவத்திடம் 9 - ரி. 55 ரக டாங்கிகளும், 18 சலாடின் கவசவாகனமும், 40 பவள் கவச வாகனமும், 15 பெரட் கவச வாகனமும், 24 –ரி 85, ரி- 86 ரக கவச வாகனமும் உள்ளன.

இவற்றை விட பல கோடி ரூபாவிற்கு மேற்குறிப்பிட்ட கவச வாகனங்களை உடனடியாக கொள்வனவு செய்து யுத்தமுனைக்கு விட அரசு தீவிர முயற்சியை மேற்கொண்டு வருவதாகவும் அச்செய்தி தெரிவிக்கிறது. —கி

---

### ராஜீவ் கொலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பிரபாகரனை பிடித்து தருமாறு இலங்கையிடம் கேட்கப்பட்டுள்ளதாம். இதற்காக இந்திய அரசு இடைநிலை அமைச்சர்கள் குழு ஒன்றை நியமித்துள்ளது பாதுகாப்பு, உள்துறை, 'றோ' அமைப்பு இவற்றிலிருந்து அதிகாரிகள் அந்தக்குழுவில் இடம்பெற்றுள்ளனர். நீதிமன்றத்தில் நிறுத்தும் வகையில் திரு பிரபாகரனை இந்தியாவிற்கு கொண்டுவரும் வகையில் இவர்கள் பரிந்துரைகளை வழங்குவர்.

இதேவேளை ராஜீவ் கொலை வழக்கில் நீதிமன்ற வழக்கிற்கு வேண்டிய ஆதாரங்கள் உண்டா என அறிய இதற்கென நிறுவப்பட்ட சிறப்பு நீதிமன்ற அலுவல்கள் நேற்று முழுவுற்றது. நவம்பர் 25ம் திகதி நீதிமன்றம் வராத, குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்காக, அவர்களுக்கான குற்றம் எவையென தெரிவிக்க கூட்டப்பட்ட அமர்வு இதுவாகும்.

முருகன் (ஸ்ரீகரன்) முதலாம் எதிரியான நளினியின் கணவர் நேற்று ஆஜரான மற்றவர்களான சாந்தன், ரவிச்சந்திரன், சுசீந்திரன், இரும்பொறை ஆகியோராகும். இதில் முருகனைத் தவிர ஏனையோர் தாங்கள் நிரபராதிகள் எனக் கூறினர் முருகன் மௌனம் சாதித்தார்.

எனினும் இந்த சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராய் உச்ச நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப் போவதாக எதிர்கள் சார்பில் வழக்கறிஞர் துரைசாமி கூறியுள்ளார். -கி

---

### க. பொ. த. (சா/த)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கானபாட வினாத்தாள்கள் முதல் தொகுதியாக எடுத்து வரப்பட்டுள்ளன. இப்பரீட்சை வினாத்தாள்களை கையேற்பதற்கென யாழ். கல்வித்திணைக்கள அதிகாரிகள் இன்று பலாலிக்குசெல்ல உள்ளார்கள் எனவும் தெரியவருகின்றது.

இப்பரீட்சைக்குரிய பாடசாலை, தனிப்பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் 185 பரீட்சை நிலையங்களும் பளை பிரதேசத்தில் ஐந்து பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. (158 - 156-கி)

---

### இலங்கைத் தமிழர்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ததை கண்டித்தும், அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் தமிழ்நாட்டில் மாபெரும் நடைபவனி ஊர்வலம் நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டின் நட்புறவு அமைப்பின் ஆதரவில் நடைபெறும் இந்த ஊர்வலம்; மதுரையில் ஆரம்பமாகி மண்டபம் முகாமை சென்றடையும்.

ஊர்வலத்தின் போது எடுத்துச் செல்லப்படும் நிவாரணப் பொருட்கள் மண்டபம் முகாமில் இருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் என்றும் மேற்படி அமைப்பின் இணைப்பாளர் திரு சி. எல். கோபாலன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதைக் கண்டித்து நேற்று சென்னையிலும் புதுடில்லியிலும் நீண்ட அறிக்கை ஒன்றையும் திரு. கோபாலன் வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையில், சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களுக்கு அஞ்சி, தமது உயிரை பாதுகாக்க தமிழ்நாட்டில் தஞ்சம்புகுந்த தமிழ் மக்களை, அவர்களின் விருப்பத்துக்கு மாறாக மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவது, தர்மத்துக்கு மாறான செயலாகும். இக்கிடத்தில் யு. என். எச். சி. ஆர் கண்மூடி, வாயடைத்து, பார்த்துக் கொண்டிருக்கிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தப்படாமல் இராணுவ முகாம்களில் பட்டினியால் வாடிவருகின்றார்கள். இலங்கையில் தற்போது லட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகவே இருக்கின்றார்கள். அவர்களின் நலன்களையே கவனிக்க முடியாது இலங்கை அரசு திண்டாடிவருகிறது. இந்த நிலையில் இங்குள்ள தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு புனர்வாழ்வு கிடைக்குமா? என்று அந்த அறிக்கையில் காரசாரமாக குறிப்பிடப்பட்டுள்ளது. -கி-கி

---

### இராணுவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுவதாகவும் செய்யப்பட்ட புகார்களைத் தொடர்ந்தே இந்த புதிய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இராணுவ உயர் அதிகாரிகள் பயணம் செய்தாலும் அவர்களின் வாகனங்களையும் சோதனை செய்யுமாறு இராணுவப் பொலிஸாருக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க உத்தரவிட்டுள்ளார் தற்போது படையினரிடம் 5000 வாகனங்கள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. வி-சி

---

### நாஞ்சில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளராகக் கடமையாற்றிய திரு. நாஞ்சில் மனோகரன் கட்சிவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு கடந்த 3 மாதங்களுக்குமுன் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டது தெரிந்ததே.

வை. கோபாலசாமியும் அவரது ஆதரவாளர்களும் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதனையடுத்து கட்சிக்குள் ஏற்பட்ட உட்பூசலை நீக்கும் முகமாகவே நாஞ்சில் மனோகரன் மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளாராம்.

திரு. நாஞ்சில் மனோகரன் வை. கோபாலசாமிக்கு ஆதரவாகவும் திரு. கருணாநிதியின் போக்கிற்கும் எதிராகவும் அறிக்கைகள் வெளியிட்டதை

